# புதிய இதயம்!

(ஞாயிறு சிந்தனைகளும் புனிதர் பூங்காவும்)

2015 மாசி

வெளியீடு :
மறைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்.

அச்சேற்றலாம் :

அருட்பணி யஸ்ரின் B. ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# புதிய இதயம்!

## 1.02.2015 பொதுக்கால 4ம் ஞாயிறு

1. உபாகமம் 18: 15-20
2. திருப்பாடல் 95: 1-2, 6. 7, 9
3. 1 கொரிந்தியர் 7: 32-35
4. மாற்கு 1: 21-28.

**சிந்தனை :**

இறைவார்த்தையைப் போதிக்க அழைக்கப்பட்டவர்கள் இறைவனின் வார்த்தையைத்தான் எடுத்தியம்ப வேண்டும். அவர்களது சொந்த வார்த்தை களையல்ல. அவர்களது சொந்த விருப்பு வெறுப்புக்களையல்ல. அவர்களது சொந்த கோபதாபங்களையல்ல. அடிக்கடி எதிர்மறையாகப் பேசுபவர்கள் கண்ணாடி வீட்டிற்குள்ளிருந்து கல் எறிபவர்களைப் போலானவர்கள். இறை வனின் திட்டத்திற்கு எதிராகப் போதிப்பவனை இறைவன் அழித்துவிடுவார் என்று உபாகமத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தின் மூலமாக எச்சரிக்கை விடுக்கின்றார்.

இறைவனைப் போற்றிப் புகழ்வதன் அவசியத்தையும் இதயத்தைக் கடினப்படுத்தாது இளகிய மனத்தோடு வாழவேண்டியதன் நன்மைத்தனத்தை யும் இன்றைய திருப்பாடல் 95 தெளிவானமுறையில் வெளிக்காட்டுகின்றது. ஆரோக்கியமான உள்ளம்கொண்டு வாழ்வோர் இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உடையோராய் பேரன்பும் பேரிரக்கமும் கொண்டவர்களாய் அவனியில் தூய அன்பின் தூதுவர்களாய் வாழுவார்கள். பிறரது நல்வாழ் வில் அக்கறை கொண்டவர்களாய் அல்லும் பகலும் இறை இராட்சியத்தைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டவர்களாய் இவர்கள் எல்லோர் இதயங்களிலும் இடம்பிடித்தவர்களாய் இயங்குவார்கள்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய 2ம் திருமடலில் துறவுநிலையில் தூய்மையான உறவு கொண்டு வாழ்வதன் அவசியத்தை உணர்த்துகின்றார். பிளவுபட்ட மனப்பான்மையை விட்டு, ஒருங்கிணைந்த நெஞ்சத்தோடு இறை அரசுப்பணியில் ஈடுபடுமாறு புனித பவுல் ஊக்குவிக்கின்றார். துறவுநிலையில் உறவுகொண்டு இறை இராட்சியப் பணியில் ஈடுபடுதல் என்பது துறவியர்களுக்கு மட்டுமல்ல அனைத்து விசுவாசிகளுக்கும் விடுக்கப்படும் பொது அழைப்பாகும். இறைகாரியங் களுக்கு, இறை அரசுப் பணிகளுக்கு முதலிடம் கொடுத்து வாழ்வதே கிறிஸ்தவ சீடத்துவத்தின் சிறப்பியல்பாகும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு அசுத்த ஆவி பிடித்தவனோடு உரையாடல் செய்கின்றார். “இயேசுவே! உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்?. நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்” (மாற்கு 1: 24) என்று தீய ஆவி இயேசுவோடு போராடியது. இயேசுவும் துணிச்சலோடு அசுத்த ஆவியை எதிர்த்துப் போராடினார். அசுத்த ஆவியை அக்கியதன்மூலம் இயேசு தான் கடவுளுக்குச் சமமானவர் என்பதை எண்பித்தார். இயேசுவின் அதிகாரம் மனிதர் வெளிக் காட்டும் அதிகாரத்திலிருந்து வித்தியாசமானது. இயேசு தன் அதிகாரத்தைக் கொண்டு பேய்களை ஓட்டினார், பரிகளை மன்னித்தார், நோயாளிகளைக் குணப்படுத்தினார். இவ்வாறு இயேசு நற்செயல்களை மேற்கொள்ளவும் நற்செய்தியைச் சொல்லவும் தனது அள்பரிய சக்தியைப் பயன்படுத்தினர். இயேசுவின் துணையோடு நாமும் தீமையான சக்திகளை வென்று, நன்மை களைச் செய்து, நற்செய்தி சொல்லி மகிழ்ந்திடலாம்.

**செயற்திட்டம் :**

1. ஆள் பாராது, நாள் பாராது, நற்செயல் செய்ய, நற்செய்தி நவில நான் முனைகின்றேன்.
2. ஏற்றத்தாழ்வு இல்லா, பாரபட்சமில்லா அன்பை எல்லோருக்கும் வாரி வழங்க முன்வருகின்றேன்.
3. அதர்மத்திற்கு எதிராகக் குரல்கொடுத்து, நீதியான சமூகத்தைக் கட்டி எழுப்ப முனைகின்றேன்.
4. ஆரோக்கியமானமுறையில் சிறுவர்களோடு, வலுக்குறைந்தவர்களோடு உறவுகொள்ள முன்வருகின்றேன்.

## 08.02.2015 பொதுக்கால 5ம் ஞாயிறு

1. யோபு: 7:1–4, 6–7
2. திருப்பாடல் 147: 1–6
3. 1 கொரி. 9:16–19, 22–23
4. .மாற்கு 1: 29–39

**சிந்தனை:**

துன்பம் ஒரு தொடர்கதையாப் பலர் வாழ்வில் இடம்பெறுவது சகஜம். எல்லாவிதத்திலும் நல்லவர்கள் எனப் பெயர்பெற்றவர்கள்கூட எதிர்பாரா வகையில் பல துன்பங்களை அனுபவித்தவண்ணம் இருப்பார்கள். “வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல்கள் தோறும் வேதனை இருக்கும்“ என்று ஒரு கவிஞன் பாடுவதுபோல, சோகக் கதை பாடுவது பலரது தொடர்கதையாகின்றது. அந்த வகையில் இன்றைய முதல் வாசகம் மனிதனின் நிலையிலாத் தன்மையினை வெளிப்படுத்துகின்றது. காற்றுக்குச் சமனான மனித உயிர் நொடிப்பொழுதில் அழிந்துபோகக் கூடியது. இலகுவில் உடைந்து போகும் நீர்க்குமிழியை ஒத்த மனித உயிரை வைத்துக்கொண்டு மனிதன் தான் எல்லாக்காலமும் வாழப்போவதாக எண்ணிக்கொண்டு மமதையோடு கற்பனையுலகில் பவனிவருகின்றான். நிலையானவற்றை இறுகப் பிடித்துக்கொண்டு மனிதன் வாழ்க்கையை மேற்கொள்வதற்கு நம்பிக்கை அவசியமாகின்றது. யோபு தன் வாழ்வில் எதிர்பாராது அனுபவிக்கும் துன்பத்திற்கான காரணிகளைக் கண்டறிய முனைகின்றார். சாதாரண மனிதைரைப் போலவே யோபுவும் பாவத்தையும் துன்பத்தையும் தொடர்புபடுத்திக் கேள்வி கேட்கின்றார். “மானிடரின் காவலரே! நான் பாவம் இழைத்துவிட்டேனா? உமக்கு நான் செய்ததென்னவோ? என்னை உன் இலக்காக மாற்றியதேன்? உமக்கு நான் சுமையாய் போனதேன்?” (யோபு 7: 20) என்று யோபு கடவுளிடம் முறையிடுகின்றார்.

துன்பவேளைகளில் நாம் எப்படிப்பட்ட அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் எடுத்தியம்புகின்றது.

1வது, கடவுள் நம்மோடிருந்து நமக்கு ஆறுதலும் உதவியுமாக இருக்கிறார் என்ற மனப்பக்குவத்தைப் பெறுவது. “மெய்யாகவே அவர் நம் பிணிகளைத்

தாங்கிக்கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்துகொண்டார்"(எசாயா .53: 4) என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள் இயேசுவில் நிறைவேறு வதை அவதானிக்கலாம். எனவே, வாழ்வில் துன்பம் எழும்பொழுது துயரப் படவேண்டிய அவசியமில்லை. மாறாக, காக்கும் கடவுள்மீது நம்பிக்கையை வளர்க்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

2வது, துன்ப வேளையில் நான் செய்யக்கூடிய பணி என்ன? என்பதே கிறிஸ்து முன்வைத்த கேள்வியாகும். இக்கேள்விதான் கிறிஸ்துவை அர்த்தமுள்ள செயற்பாட்டிற்கு இட்டுச் சென்றது. மக்களுக்குச் சேவை செய்ய உந்தித் தள்ளியது. எனவே, நாமும் பிறர் துன்பப்படும்வேளையில் எப்படி உதவலாம் எனத் திட்டம் போடுவோம்.

**செயற்திட்டம்:**

1. காரணம் தேடாது கடவுளின் திருத்திட்டத்தை நிறைவேற்றுவதில் உன்னிப்பாகச் செயற்படுவேன்
2. இளையோரை வளப்படுத்தும் திட்டங்களை இனம்கண்டு அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுப்பேன்.
3. இறைவார்த்தையை அடிக்கடி வாசித்து, என் வாழ்விற்கான அர்த்தம் காணத் தியாக செயல்களில் ஈடுபடுவேன்.
4. அன்பிய மட்டத்தில் சிறு சிறு செப-செயற் குழுக்களை உருவாக்கி, கிறிஸ்து மையக் கோட்பாட்டினை வலியுறுத்துவேன்.

## 15.02.2015 பொதுக்கால 6ம் ஞாயிறு

1. லேவியர் 13: 1-2, 44-46
2. திருப்பாடல் 32: 1, 2, 5, 11
3. 1 கொரிந்தியர் 10: 31-11:1
4. மாற்கு 1: 40-45

**சிந்தனை:**

இன்றைய வாசகங்கள் நாம் நோயாளர் சார்பாகப் பரிவன்போடும் கரிசனையோடும் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை வெளிப் படுத்துகின்றன. இன்றைய காலகட்டத்தில் முன்னொருபோதும் இல்லாதவாறு

பல்வேறுபட்ட உடல்சார்பான, உள்ளம்சார்பான நோய்களுக்கு எம்மக்கள் உள்ளாகி வருகின்றனர்.

இன்றைய 1ம் வாசகத்தில் இஸ்ராயேலரின் வழமைகள் இறுக்கமான முறையில் முன்வைக்கப்படுகின்றன. தொழுநோயாளர்கள் சமூக உறவிலிருந்து முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டவர்களாய், தொடப்படாக் கூட்டத்தினராய் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். “தொழுநோயால் பாதிக்கப் பட்டவர் கிழிந்த உடை அணிந்து, தலை வாராமல் மேலுதட்டை மறைத்துக் கொண்டு, “தீட்டு, தீட்டு“ எனக் குரலெழுப்ப வேண்டும். நோயுள்ள நாளெல்லாம் அவர் தீட்டுள்ளவர். எனவே, தீட்டுள்ள அவர் பாளையத்துக்கு வெளியே தனியாகக் குடியிருப்பார்” (லேவியர் 13 : 46).

இன்றைய 2ம் வாசகத்தில் புனித பவுல் ஐந்து அம்சத் திட்டத்தை முன்வைக்கின்றார்:
1வது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கடவுளை மாட்சிமைப்படுத்தல்
2வது, பிறருக்கு இடையூறாயிருப்பதைத் தவிர்த்துக்கொள்ளல்
3வது, அனைத்திலும் அனைவருக்கும் உகந்தநிலையில் வாழுதல்
4வது, பிறர் மீட்படையும் விதத்தில் எம் வாழ்க்கையை மாற்றியமைத்தல்
5வது, கிறிஸ்துவை ஒத்த வாழ்வை மேற்கொள்ளல்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் தொழுநோயாளி, “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று முழந்தாட்படியிட்டு இயேசுவிடம் வேண்டினார். இயேசுவும் அவர்மீது பரிவுகொண்டு தமது கையை நீட்டி, அவரைத் தொட்டு, அவரிடம், “நான் விரும்புகிறேன். உமது நோய் நீங்குக” என்றார். (மாற்கு 1 : 41). உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்க அவர் நலமடைந்தார். இயேசு, “இந்த அற்புதத்தைப் பகிரங்கப்படுத்த வேண்டாம்“ என்று கூறினார். அவரோ இச்செய்தியை ஊரெல்லாம் சென்று பறைசாற்றினார். இவ்வாறு இயேசுவின் மனப்பான்மையில் நாம் வாழமுன்வரும்பொழுது ஒதுக்கிவைக்கப்படும் நிலை நீக்கப்பட்டு, மனச் சோர்வின்றிச் சேர்ந்துவாழும் நிலை உதயமாகும். “யாதும் ஊரே! யாவரும் கேளீர்!“ என்ற சமத்துவ கீதம் எல்லா உள்ளங்களிலும் எதிரொலிக்கும். கிறிஸ்து விரும்பும் சமத்துவ, சகோதரத்துவ, சுதந்திர சமுதாயம் நம் மண்ணில் மலரும்.

**செயற்றிட்டம்:**

1. பாரபட்சமற்ற அன்புச் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப நல்ல உள்ளங்கள் ஒருங்கிணைந்து செயற்படல்
2. நோயாளிகள் சார்பாகக் கரிசனையோடும் பரிவன்போடும் நடந்து கொண்டு அவர்களுக்கு நம்பிக்கையூட்டல்
3. பேய், பில்லி, சூனியம், மாயம், மந்திரம் போன்ற தீய பழக்க வழக்கங் களை முறியடித்து உண்மைக்கும் சத்தியத்திற்கும் சான்று பகர்தல்
4. முதியவர்களின் இயலாத்தன்மையை கொச்சைப்படுத்தாது அவர்களது உணர்வுகளை மதித்து, அவர்களோடு தோழமையுணர்வோடு பழகுதல்.

## 18.02.2015 திருநீற்றுப் புதன்

1. யோவேல் 2 : 12–18
2. 2 கொரி. 5:20 – 6:2
3. திருப்பாடல் 51 : 3–6, 12–14, 17
4. மத்தேயு 6 : 1–6, 16–18

**சிந்தனை:**

இன்று தவக்காலம் ஆரம்பமாகின்றது. "மனம் மாறி நற்யெ்தியினை நம்புங்கள்" என்று குருவானவர் கூறி, நெற்றியில் நீற்றினைப் பூசுவது மனிதன் தூசுக்குச் சமமானவன் என்பதை நினைவுபடுத்துகின்றது. கடவு ளோடு தொடர்பு அறுந்த நிலையில் மனிதன் ஒன்றுமில்லாதவன் என்பதை நினைத்துப் பார்ப்பது இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் தனது இலக்கினை அடைந்துகொள்ள அவன் இறைவனோடு சங்கமமாகவேண்டும் என்பதேயாகும்.

"இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு உள்ளத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 2: 12) என்று இறைவன் இறைவாக்கினர் யோவேல் வழியாகச் செய்தி விடுக்கின்றார். "நீங்கள் உங்கள் உடலைக் கிழித்துக் கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 12: 13) என்று இறைவாக்கினர் தொடர்ந்து கூறுகின்றார். இறைவனின் ஆழமான, அருள்நிறைந்த வார்த்தைகளை நாம்

ஏற்றுக்கொண்டால் தவக்காலத்தின் ஆரம்பநாள் ஒரு திருப்புமுனையாக, பாவத்திலிருந்து புண்ணியநிலைக்குக் கடந்துவந்த, நோயிலிருந்து சுகவாழ்வை எய்திய, கவலையிலிருந்து களிகூர்ந்தநிலையை அடைந்த, அற்புதமான நாளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

“நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுள் எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள்” என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம் (1 கொரி. 5: 20). “தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன். விடுதலை நாளில் நான் உமக்குத் துணையாயிருந்தேன்” எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம். இன்றே மீட்பு நாள் (1 கொரி. 6: 2). ஆம் தவக்காலம் மீட்பின் காலம், மனமாற்றத்தின் காலம், மன்னிப்பு வழங்கலின் காலம், மன்னிப்புப் பெறுதலின் காலம், தூய அன்பின் பரிமாற்றக்காலம், தான, தர்ம ஒறுத்தல் முயற்சிகள் நிறைந்த காலம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் வெளிப்பார்வைக்காக நோன்பு இருத்தல், தான தர்மம் செய்தல், இறைவேண்டல் செய்தல் போன்றவற்றைத் தவிர்க்குமாறும் உள்ளன்போடு அவற்றை மேற்கொள்ளுமாறும் இயேசு வலியுறுத்துகின்றார். நல்ல மனப்பான்மையோடு நற்காரியங்களை அனுசரிப்பது, நற்செய்தி சொல்வது, விருந்தோம்பலில் வாழ்வினை நிறைவாக்குவது தவக்காலத்தின் சிறப்பான செயற்பாடுகளாகும்.

**புதிய கட்டளைகள்:**

1. இறைவனுக்கு முதலிடம் கொடுங்கள்
2. இன்றே நன்றாய் வாழுங்கள்.
3. இச்சையை நெறிப்படுத்தி இனிதே வாழுங்கள்.
4. உள்ளன்போடு இருப்பதைக் கொடுங்கள்.
5. உரிய காரியத்தை உரிய நேரத்தில் செய்யுங்கள்.
6. எளிமையாய் வாழுங்கள்.
7. ஏனோதானோநிலையில் செயற்படாதீர்கள்
8. சுயநலச்சிறையினை உடைத்து, ஏற்றத் தாழ்வுகளைக் களையுங்கள்.
9. கோபத்தை விட்டு, நேர்நோக்கில் உறவை வளருங்கள்.
10. மது, போதைப் பழக்கத்தைத் தவிருங்கள்.

## 22.02.2015 தவக்கால 1ம் ஞாயிறு

1. தொடக்கநூல் 9: 8–15
2. திருப்பாடல் 25: 4–9
3. 1 பேதுரு 3: 18–22
4. மாற்கு 1: 12–15

**சிந்தனை:**

ஒவ்வொரு நாளும் அந்தோனி குடிவெறியில் இரவுவேளையில் வந்து தனது மனைவி மிதுலாவை அடித்துத் துன்புறுத்தித் தகாத வார்த்தைகள் பேசிவந்தான். மிதுலாவும் மனம் தளராது புனித அந்தோனியாரிடம் வேண்டு தல் செய்துவந்தாள். ஒருநாள் இரவு, கூரை வாயிலாக நிறையப் பொன் நாணயங்கள் பொழியப்பட்டன. பக்கத்துவீட்டுக்காரி கமலாவிடம் மிதுலா ஒரு கொத்து வாங்கி வந்து பொன் நாணயங்களை அளக்கலானாள். கமலா கொத்தின் பின்பக்கத்தில் புளி பூசிக் கொடுத்தாள். கொத்தைக் கமலா திரும்பப் பெற்றபோது கொத்தோடு ஒட்டிவந்த பொன்நாணயத்தைக் கண்டு, மிகவும் சந்தோசம் கொண்டாள். மிதுலாவிடம் கேட்டு நிகழ்வின் விபரங்களை அறிந்துகொண்டாள். தனது கணவனிடம் 500 ரூபாப் பணம் கொடுத்துக் குடித்துப்போட்டு வந்து தன்னைத் தடியால் அடிக்குமாறு கேட்டுக் கொண்டாள். அவனும் அவ்வாறே செய்தான். ஆனால் புதுமை எதுவும் நடக்கவில்லை. மீண்டும் மிதுலாவை விசாரித்தபொழுது, அந்தோனி தன்னை உலக்கையால் கடுமையாக அடிப்பதாகக் கூறினாள். உடனே கமலா தனது கணவனிடம் 1000 ரூபா கொடுத்து, "நீயும் ஓர் ஆம்பிளையா? நல்லாக் குடிச்சுப்போட்டு இந்த உலக்கையால என்னை நல்லா அடி. நான் நல்லா அழுவன். அப்பதான் நமக்கு அந்தோனியார் நிறையக் காசு தருவார்" என்று கூறினாள். அவனும் குடித்திட்டு வந்து, கடும்வெறியில் உலக்கையால் தலை யில் நல்ல அடி போட்டான். அவள் அப்படியே இறந்துபோனாள். சோதனை சரியானமுறையில் வெல்லப்படாவிட்டால் வேதனைதான் எஞ்சிநிற்கும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் தூயஆவியினால் இயேசு பாலை வனத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு 40 நாட்கள் சாத்தானால் சோதிக்கப் பட்டார். 40 என்ற சொல் அடிக்கடி திருவிவிலியத்தில் பயன்பட்டுவந்த சொல் லாகும்.

1வது, 40 நாட்கள் நோவாவின் காலத்தில் வெள்ளப் பெருக்கு.
2வது, 40 ஆண்டுகள் இஸ்ராயேலர் பாலைவனத்தில் பயணித்தார்கள்.
3வது, 40 நாட்களில் நினிவே அழிக்கப்படும் என யோனாவால் எச்சரிக்கை.
4வது, 40 நாட்கள் இறைவாக்கினர் எலியா நோன்பிருந்தார்.
5வது, 40 நாட்கள் சீனாய் மலையில் மோயீசன் தங்கியிருந்தார்.
6வது, 40 நாட்கள் இயேசு பாலைவனத்தில் நோன்பிருந்தார்.

எனவே, தவக்காலத்தில் கிறிஸ்துவை மறந்துவிட்டு மக்களைப் பின்பற்றும் போக்கை விட்டுவிடுவோம். கொலம்பஸ் அமெரிக்காக் கண்டத்தைக் கண்டுபிடித்தார். நாமோ இழந்துவிட்ட எம்மையே கிறிஸ்துவின் ஒளியில் கண்டுபிடிக்க முயற்சி எடுப்போம். சோதனையை வென்று முன்நோக்கிப் போதல் என்பது சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து அவ்வழி செல்வதாகும். கடவுளுக்கு விசுவாசமாயிருத்தல், கடவுளை நம்புதல், கடவுள் நம்மை அன்புசெய்வதுபோல் நாம் பிறரை அன்புசெய்தல் போன்றவை இறைவழியில் செல்வதற்கான அடையாளங்களாகும். கடவுளை வார்த்தையிலும் வாழ்க்கை நிகழ்வுகளிலும் சந்திக்கும்பொழுது பாலைவனத்தில் கடவுளின் குரலொலி எதிரொலிக்கும். சோதனைகள் எம்மை வீழ்த்துவதற்காக அல்ல. மாறாக, நாம் சாதனையாளர்களாக மாற முடியும் என்பதை வெளிக்காட்டவே.

**செயற்திட்டம்:**

1. தவக்காலத்தில் புதிய அணுகுமுறையில் வாழ்வினை எதிர்கொண்டு, கிறிஸ்தவ விழுமியங்களுக்கு செயல்வடிவம் கொடுத்தல்
2. சோதனைகளைக் கண்டு மனச் சோர்வடையாமல் துணிச்சலுடன் எதிர்நீச்சல்போடல்
3. அன்றாடம் இறை அன்பினை அனுபவித்து, சுவைத்து இன்புறல்
4. இறைவனை நம்பியவர்களாய், நம்மை நம்பியவர்களாய், பிறரை நம்பியவர்களாய் உற்சாகத்தோடு வாழுதல்.

## மாசி 3 புனித பிளேஸ் ( - 316)

ஆர்மேனியாவிலுள்ள செபஸ்ரெ மறைமாவட்ட ஆயராம் பிளேஸ் வேத சாட்சியாக 316 இல் சாவுக்கு உள்ளாக்கப்பட்டார். உரோமைத் திருச்சபை யில் இவரது திருநாள் மாசி மாதம் 3 ம் திகதியும் கிரேக்கத் திருச்சபையில் மாசி மாதம் 11 ம் திகதியும் கொண்டாடப்படுகின்றது. இவர் ராகுசாவின் பிரதான பாதுகாவலாக விளங்குகின்றார்.

இரும்பு வார்ப்புக்கள், வாள், கத்தி போன்றன மறைசாட்சியரின் இரத்தத்தினால் தோய்த்து எடுக்கப்பட்டு அவர்களது தோற்கடிக்கப்படாத துணிச்சலையும் இறைபணியின் மாறாத் தன்மையையும் வெளிக்காட்டும் தூய அடையாளங்களாகத் திகழ்கின்றன. எமது பணிவாழ்விலும் நாங்கள் திருமுழுக்கின் அருளைப் புதுப்பித்துப் புதுவாழ்வு வாழ எத்தனிக்கிறோம். இயேசுவின் ஆழ்ந்த அன்புக்குச் சான்று பகர முயலுகின்றோம். ஆயினும் எம் முயற்சிகள் ஆர்வம் குன்றிய நிலையில் ஆரம்பத்திலேயே கைவிடப்படு கின்றன. உலக மக்களுக்கு, உணர்வுகளுக்கு அடிமையாக மாறும் நிலையி லிருந்து விடுபட்டு நித்திய வாழ்வைப் பெறப் பயணிப்போம். போலிகளைக் கண்டு ஏமாந்தது போதும். உலகமாயைக் கவர்ச்சிகளால் கட்டுப்பட்டு வீழ்ந்தது போதும். எழுந்து செல்வோம். “இறை இராட்சியத்தை நோக்கி நிறை வாழ்வு பெற்றிட ஆட்சியும் மாட்சியும் என்றென்றும் அவருக்கே“ என்று வாழ்ந்திடுவோம்.

## மாசி 4 புனித அருளானந்தர் (1647 – 1693)

இவர் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1647 பங்குனி 1ம் திகதி பிறந்தார். இவர் இயேசு சபையில் இணைந்துகொண்டு, புனித பிரான்சிஸ் சவேரியாரின் பாதையில் இந்தியாவிற்குச் சென்று பணியாற்ற விரும்பினார். மிகவும் கஸ்டமான பயணத்தின் பின்னர், 1673ல் கோவாவை அடைந்து, அங்கு புனித பிரான்சிஸ் சவேரியாரின் கல்லறையைத் தரிசித்தார். பின்னர் தமிழ்நாடு வந்து மறவன்சீமையில் பணியாற்றினார். இந்தியர்களால் “போர்த்துக்கேய பிரான்சிஸ் சவேரியார்“ என அழைக்கப்பட்டார். இவர் மறவன்சீமை அரசனால் 1684ல் சிறையிலடைக்கப்பட்டார். 1687ல் அரளானந்தர் லிஸ்பன் சென்று 1690ல் 24 புதிய மறைப்பணியாளர்களுடன்

மறவன்சீமை வந்தார். அருளானந்தர் காவியுடை அணிந்து தமிழ் சந்நியாசிபோலத் தோற்றமளித்தார். சைவச் சாப்பாடே இவரது சாதாரண உணவானது. இவர் மறவன் சீமை இளவரசன் தடியத்தேவனை மன மாற்றினார். தடியத்தேவன் பல பெண்களை திருமணம் செய்திருந்தான். அவன் மனமாற்றத்தின் பின்னர், ஒரு பெண்ணை மட்டும் மனைவியாக வைத்துக்கொண்டு ஏனையோரை விலக்கிவிட்டான். அவர்களில் ஒருத்தி அரசன் சேதுபதியின் மருமகள் ஆவாள். அவள் அரசனிடம் முறையிட்டாள். அரசன் கோபம் கொண்டு, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். அருளானந்தரை ஓரியூரில் 1693 மாசி 4ல் சிரச்சேதம் செய்யப்பட்டார். திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1833ல் அருளானந்தரை அருளாளராகப் பிரகடனப்படுத்தினார். 1947 ஆனி 22ல் திருத்தந்தை 12ம் பத்திநாதர் அருளானந்தருக்குப் புனிதர் பட்டம் கொடுத்தார்.

**மாசி 5 புனித ஆகத்தா**

இவர் சிசிலியில் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதி லேயே இவர் கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்தவராய் கற்புநெறியில் சிறந்து விளங்கினார். குயின்ரியானுசு எனும் பிரபு தனது காமஇச்சைகளால் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தலானான். இவன் பலவந்தமாக ஆகத்தாவைக் கொண்டுவந்து அச்சுறுத்தினான். ஆகத்தாவோ பக்தியோடு உருக்கமாக செபித்தார்:

“இயேசுக் கிறிஸ்துவே, எல்லாவற்றிற்கும் ஆண்டவரே, நீர் எனது இதயத்தை அறிவீர். நீர் எனது ஆசையை அறிவீர். நான் உமது மந்தை. நான் உனக்கே உரியவர். சாத்தானை வெல்லுவதற்கான சக்தியைத்தாரும்.’ ஆகத்தா தொடர்ந்து அழுதழுது செபித்தார். துணிச்சலுக்காகவும் தைரியத்திற்காகவும் வேண்டினார். விபச்சார விடுதியில் கட்டாயமாக விடப்பட்டு துன்புறுத்தப்பட்டார். அவர் மனச்சோர்வின்றி போராடினார்.

குயின்ரியானுசு 30 நாட்கள் சித்திரவதையின்பின்னர் தன்முன்னால் ஆகத்தாவைக் கொண்டுவந்து நிறுத்துமாறு கட்டளை பிறப்பித்தான். “கிறிஸ்துவின் சீடத்தியாக இருப்பதே எனக்கு எல்லாம்“ என்று கூறி எல்லாத் துன்பங்களையும் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டார். மீண்டும்

சிறையிலிடப்பட்டார். அவரோ மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார். மறுநாளும் இயேசுவை மறுதலிக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். ஆனால் ஆகத்தாவோ, "இயேசுவே என்வாழ்வு, என் இரட்சணியம்" என்று உறுதியாகக் கூறினார். இத்தனை சித்திரவதைகள் மத்தியிலும் அவர் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்ணுற்று குயின்ரியானுசு கொதிப்படைந்தான். மேலும் கொடிய சித்திரவதைக்கு உள்ளாக்கி மார்பகங்களை வெட்டுவித்தான். நீ உன் தாயின் கொங்கைளில் பால் அருந்தவில்லையா? கொடியவனே உனக்கு வெட்கமில்லையா?" என்று கதறினார்.

ஆகத்தா மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். உணவு, தண்ணீர் எதுவும் கொடுபடவில்லை. ஆனால் கடவுளே அவரைக் குணப்படுத்தினார். விண்ணக வெளிச்சத்தால் அவர் இருந்த இடம் நிரப்பப்பட்டது. புனித பேதுரு தன்னை ஆறுதல்படுத்துவதாகக் காட்சி கண்டார். நான்கு நாட்களுக்குப்பின்னர், குயின்ரியானுசு ஆகத்தாவை நிர்வாணமாக்கி, தணலாகவுள்ள நிலக்கரித் துண்டுகள்மேல் உருட்டுவித்தான். "ஆண்டவரே, என்னைப் படைத்தவரே, தொட்டிலிலிருந்து என்னைக்காப்பாற்றிவந்தீர். உலக இன்பத்தில் இருந்து என்னை விடுவித்து, துன்பத்தைத் தாங்கும் வலுவைக்கொடுத்தீர். இப்பொழுது எனது ஆன்மாவை ஏற்றுக்கொள்ளும்" என்றுகூறி இறையடி சேர்ந்தார்.

## மாசி 6 புனித டொறத்தி

செசாரியாவின் ஆளுனன் பபிரியுறிஸ் டொறத்திமீது கடும் சித்திர வதைகளை மேற்கொண்டான். ஏனெனில், டொறத்தி திருமணம் செய்யவும் சிலைகளை வழிபடவும் மறுத்துவிட்டார். இவரை வசியப்படுத்தி தவறிழைக்க அனுப்பப்பட்ட இரு பெண்களையும் மனமாற்றினார். புனித டொறத்தி தெய்வீக மணவாளனால் கொடுக்கப்பட்ட பழங்களைக்கொடுத்து தன்னைக் கொல்லவந்த தியோபிலசை மனமாற்றினார். இவர் தியேரிளசியஸால் கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார். இவரது சடலம் உரோமிலுள்ள இவர் பெயர்கொண்ட ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மறைசாட்சியரின் இரத்தம் நூறு மடங்கு பயன்கொடுத்தது. கொடுமைப் படுத்தபட்டு கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை கூடக்கூட திருச்சபையின்

எண்ணிக்கையும் கூடியது. கத்தரிக்கப்பட்ட திராட்சைக் கிளைகளில் கூடுதலான கனிகள்பெறப்படுவதுபோல் நாமும் நிறைந்த கனி கொடுக்க வேண்டும்.

## மாசி 10 புனித ஸ்கொலஸ்ரிகா ( - 543)

புனித ஸ்கொலஸ்ரிகா புனித பெரிய ஆசீர்வாதப்பரின் சகோதரியாவார். இவர் இளம்பருவத்திலேயே இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்திருந்தார். புனித ஆசீர்வாதப்பரின் சந்நியாசமடத்திலிருந்து 5 மைல் தொலைவில், பெண் துறவியருக்கான சந்நியாச மடத்தை ஸ்தாபித்தார். ஸ்கொலஸ்ரிகா வருடத்திற்கு ஒருமுறை ஆசீர்வாதப்பரைச் சந்திக்க வருவார். இருவரும் அருகே அமைந்த ஒரு வீட்டில் சந்தித்து இறைவனைப் போற்றிப் புகழ்ந்து ஆன்மீக காரியங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். மறக்க முடியாத சம்பவம் இது. ஒருமுறை சந்திப்பின்போது ஸ்கொலஸ்ரிகா இரவு முழுவதும் செபித்துவிட்டு செல்ல விரும்பினார். ஆனால் ஆசீர்வாதப்பர் விரும்பவில்லை. எனவே, ஸ்கொலஸ்ரிகா இறைவனை இரந்து வேண்டினார். கடும் மழை தொடர்ந்து பொழிந்தது. இடியும் மின்னலும் தொடர்ந்தது. ஆசீர்வாதப்பரோ அல்லது அவரோடு வந்த துறவியரோ ஓர் அடி கூட எடுத்துவைத்து வெளியேற முடியவில்லை.

“என்ன செய்துவிட்டீர், சகோதரியே! கடவுள்தான் உன்னை மன்னிக்க வேண்டும்“ என்று ஆசீர்வாதப்பர் சற்று கடிந்துகொண்டார். ஸ்கொலஸ்ரிகா, “நான் கேட்டதை நீர் நிறைவேற்றவில்லை. ஆனால் கடவுளிடம் நான் கேட்டதை அவர் தந்துவிட்டார்“ என்று மகிழ்வோடு கூறியதும் இருவரும் இணக்கப்பாட்டிற்கு வந்து ஆன்மீகக் காரியங்ளைப் பற்றி அளவளாவிக் கதைத்தார்கள். மறுநாள் காலையில் இருவரும் பிரிந் தார்கள். அதுவே அவர்களது இறுதிப் பிரிவாயமைந்தது. மூன்று நாட்களின் பின்னர், 543இல் ஸ்கொலஸ்ரிகா இறையடி சேர்ந்தார். ஆசீர்வாதப்பர் தன் சகோதரி புறா வடிவில் வான் நோக்கிச் செல்வதைக் கண்ணுற்று ஆனந்தத்தில் மூழ்கி ஆண்டவருக்கு நன்றி கூறிச் செபித்தார். தனக்கென ஆயத்தப்பட்டிருந்த கல்லறையில் தன் சகோதரியின் உடலைப் புதைத்தார்.

இறை அன்பை நிறைவாகத் தன் வாழ்விலே கொண்டு விளங்கின ஸ்கொலஸ்ரிகா தூய்மைக்கும் மேன்மைக்கும் துல்லியமான சான்று

பகருகின்றார். உண்மையான அன்புக்கும் மெய் பக்திக்கும் உரியவராகத் திகழ்கின்றார் இவர். உண்மை அன்பு ஒருபோதும் தோற்பதில்லை.

## மாசி 14 புனித வலன்ரைன் ( - 270)

வலன்ரைன் றோமில் குருவாகப் பணியாற்றினார். இவர் புனித மேரியசுடனும் அவரது குடும்பத்தினருடனும் இணைந்து 2ம் குளோடிசின்கீழ் துன்புறுத்தப்பட்ட மறைசாட்சிகளுக்கு உதவி நல்குவதில் ஈடுபட்டார். இவர் கிறிஸ்தவன் என அறியவந்ததும் விசுவாசத்தை மறுதலிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டார். ஆனால் இவரோ இறுதிவரை விசுவாசத்திற்காகப் போராடினார். விளைவாக, 270ம் ஆண்டு மாசி மாதம் 14ம் திகதி, தடியினால் அடிக்கப்பட்டு, தலை வெட்டப்பட்டு மறைசாட்சியானார். திருத்தந்தை 1ம் யூலியஸ் புனித வலன்ரைன் பெயரில் கோவில் கட்டிக் கௌரவித்தார். புனித வலன் ரைனின் திருநாள் மாசி மாதம் 14ம் திகதி கொண்டாடப்படுகின்றது. இளம் ஆண்கள் இளம்பெண்களுடைய பெயர்களை தேவதை யுனொவோவின் நினைவாக எழுதிவரும் மூடப்பழக்கத்தை நீக்க அருட்பணியாளர்கள் புனிதர்களின் பெயர்களை எழுதி அனுப்ப இந்த நாளில் ஆரம்பித்தார்கள். பின்னர் இந்நாள் காதலர் தினமாக (Valantine day) அனுஸ்டிக்கப்படுகின்றது.

## 23 மாசி புனித பொலிகாப் (66 - 166)

இவர் இளம் வயதில் கிறிஸ்தவத்தைத் தழுவினார். 80ம் ஆண்டில் இவர் அப்போஸ்தலரும், நற்செய்தியாளருமான அருளப்பரின் சீடரானார். 96ம் ஆண்டு இவர் ஸ்மிர்னாவின் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார். 70 ஆண்டுகள் ஆயராகப் பணியாற்றினார். ஆசியாவில் மிகவும் பிரசித்திபெற்ற ஆயராக இவர் விளங்கினார். விசுவாசிகளின் பார்வையில் இவர் பெரும் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவராக சிறந்து விளங்கினார். தூய சீடர்களை இவர் உருவாக்கினார். அவர்களுள் புனித ஜரேணியஸ் ஒருவராவர்.

புனித இக்னேசியஸ் ஸ்மிர்னாவுக்கு வந்தபொழுது மரியாதையோடு புனித பொலிகார்ப் அவரை வரவேற்றார். புனித இக்னேசியஸ் அந்தியோக்கியா திருச்சபையை இடைக்கிடையே கவனிக்குமாறு ஆசியத் திருச்

சபைக்கும் ஆலயத்திற்கும் கடிதம் எழுதுமாறும் பணித்தார். புனித பொலிகார்ப் அந்தியோக்கியா திருச்சபைக்கு சிறந்த படிப்பினைகள் நிரம்பிய கடிதம் ஒன்றை அனுப்பினார். இக்கடிதம் மிகவும் அற்புதமானது என புனித ஐரேனியஸ், புனித ஜெறோம், கியுசேபியஸ், போற்றியஸ் ஆகியோரினால் பாராட்டப்பெற்றது. அதில் "சாத்தானின் மூத்த மகனே நாஸ்திகன் ஆவான்" என்று கூறப்பட்டிருந்தது.

158இல் பொலிகார்ப் உரோமைக்குச் சென்று திருத்தந்தை அனுசெற்றூசைச் சந்தித்து உரையாடினார். பௌர்ணமிக்குப் பின்னர் 14ம் நாளில் யூதர்களின் முறைப்படி ஆசியநாடுகளிலும் பௌர்ணமிக்குப் பின்னர் வரும் ஞாயிறில் றோமை, எகிப்து, மேற்கத்திய நாடுகளிலும் ஈஸ்ரர்விழா கொண்டாடப்பட்டது. இது சார்பாக மாற்றம் தேவையா? என இருவரும் கலந்தாலோசித்தார்கள். ஈற்றில் அந்தந்த ஊர் வழமைகளைப் பின்பற்றுவது என முடிவிற்கு வந்தார்கள்.

மாக்கஸ் அவுரேலியஸின் 6ம் ஆட்சி ஆண்டில் பெரும் கலாபனை வெடித்தது. பலர் விசுவாசத்தை மறுதலிக்காமல் துணிச்சலோடு மரணத்தை எதிர்கொண்டார்கள். எம்புனிதரின் நண்பர்கள் அவரை ஒரு கிராமத்தில் ஒழித்து வைத்தார்கள். அங்கு தொடர்ந்து செபித்துக்கொண்டிருந்தார். இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தனது தலையணை பற்றி எரியக் காட்சி காண்டார். உயிரோடு தாம் எரிபடப் போவதாக தனது நண்பருக்கு வெளிப்படுத்தினார்.

கலாபனையாளர்கள் இரவில் வந்து கதவைத் தட்டினார்கள். "இறைவனது விருப்பம் நிறைவேறட்டும்" என்று சொல்லிக்கொண்டு கதவைத் திறந்து கொண்டு, வந்த விருந்தாளிகளுக்கு உணவு பரிமாறுமாறு பணித்தார். செபிப்பதற்கு நேரம் தருமாறு வேண்டினார். வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரு மணித்தியாலங்கள் நின்றபடியே முழுத்திருச்சபையையும் உருக்கமான முறையில் கடவுளிடம் ஒப்புக்கொடுத்து வேண்டுதல் செய்தார். பின்னர் கழுதையில் ஏற்றப்பட்டு நகர் நோக்கிப் புனிதர் அவர்களுடன் பயணமானார். இடையில் ஏரோதும் அவரது தந்தை நிசற்றசும் இவரைத் தமது வாகனத்தில் எற்றிக்கொண்டு நட்புரீதியாகப் பேசினார்கள். "சீசரே ஆண்டவர்" என்று சொல்லிச் சாவினின்று தப்பித்துக்கொள்ளலாமே என்று ஆலோசனை சொன்னார்கள்.

“நிச்சயமாக அதை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்“ என்று உறுதியாக மொழிந்தார். உட்னே அவர்கள் அவரைக் கடினமாகப் பேசி வாகனத்திலிருந்து தூக்கி எறிந்தார்கள். அவரது கால் காயப்பட்டது. எனினும் அவர் மகிழ்ச்சியோடு மக்கள் திரண்டிருந்த இடத்திற்கு நடந்து சென்றார். “பொலிகாப் தைரியமாயிரு, துணிச்சலோடிரு, செயற்படு“ என வானத்திலிருந்து குரலொலி கேட்டது. “இயேசுவை மறுதலித்தால் நீ சாவிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்“ என மீண்டும் கத்தினார்கள்.

ஆனால் பொலிகாப் துணிச்சலோடும் மகிழ்ச்சியோடும் இயேசுவிற்கு சாட்சியம் பகர்ந்தார். இவரது கைகளைப் பின்பக்கமாகக் கட்டினார்கள். இவர் வானத்தை ஏறெடுத்துப் பார்த்துச் செபித்தார். “வல்லமையுடைய கடவுளே, என் அன்பு ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் தந்தையே, அவர் மூலமாகவே உம்மைப் பற்றி அறிந்துகொண்டேன். வானதூதரின் கடவுளே, இந்த நேரத்தில் காட்டுகின்ற நன்மைத் தனத்திற்காக நன்றி கூறி உம்மைப் புகழுகின்றேன். கிறிஸ்துவின் இரத்தத்தை பருகி மறைசாட்சியாய் மரணிக்க ஆவியின் அழியாமையில் நித்திய வாழ்வு நல்கும் உயிர்ப்பினில் பங்கெடுக்க நீர் தந்த இந்த வாய்ப்பிற்காக நன்றி கூறுகின்றேன். உண்மையான நம்பிக் கைக்குரிய கடவுளே, நித்திய குருவாகிய இயேசுவின் மூலமாக உம்மைப் போற்றுகின்றேன். உம்மை மகிமைப்படுத்துகின்றேன். தந்தை, மகன், தூய ஆவிக்கு என்றும் மகிமையுண்டாவதாக, ஆமென்“ என்று சொல்லிச் செபித்து முடித்ததும் பெரும் சுவாலை அவரைச் சுற்றியும் மேலாகவும் எரிந்தது. அவரோ எரிந்து கருகாமல் தங்கம் போல் பிரகாசித்துக்கொண்டிருந்தார். உடலிலிருந்து நறுமணம் கமகம என வீசியது. அவரை ஈட்டியால் குத்தியதும் இரத்தம் ஆறாக ஒடியது. எரிக்கப்பட்ட அவரது எலும்புகளை விலை மதிப்பில்லாத் தங்கம் போலப் பொறுக்கி எடுத்தார்கள். கி.பி. 166ம் ஆண்டு விடியற்காலை இரண்டு மணிக்கு புனித பொலிகாப் மறைசாட்சியாக வானக முடிசூட்டப்பட்டார்.

**ஆக்கம்:**

**அருள்முனைவர் டேவிற் வி. பற்றிக், அ.ம.தி.**

**டி. மசனெட் அ.ம.தி. இறையியலகம்,**

**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**அன்பு நெஞ்சங்களே!**

இம்மாதத்திற்கான புனிதர்களது வாழ்க்கை நிகழ்வுகளும் ஞாயிறு சிந்தனைகளும் இந்த இதழை அலங்கரித்துநிற்கின்றன. கத்தோலிக்க விசுவாசத்தில் வேரூன்றி, இறை இராட்சியம் பரப்பிடும் மறைத் தூதுவர்களாக நல்வாழ்வு வாழ்ந்திட நல்வாழ்த்துக்கள்!

இறை இராட்சியப் பண்புகள், நல்ல விழுமியங்கள் மேலோங்கி உள்ளங்களில் மலர்ந்திட நாம் ஒவ்வொருவரும் அயராது உழைக்க வேண்டும். "உண்மையான திராட்சைச்செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர். என்னிடமுள்ள கனிகொடாத கிளைகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனி தரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்துவிடுவார்" (யோவான் 15:1-2) என்று கிறிஸ்து கூறுவது நாம் எம்மிடமுள்ள தேவையில்லாத் தன்மைகளை நீக்கிவிட்டு, எமது இயல்பான நன்மைத்தனங்களில் வளரவேண்டும் என்பதையே நினைவூட்டுகின்றது. நாளாந்தம் நாம் சுயநலத்தில் மடிந்து, தியாகசிந்தையோடு வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள முன்வருவோம்.

**- அருட்பணி A. அகஸ்ரின்,**

**இயக்குனர் ,**

**மறைக்கல்வி நடுநிலையம்,**

**யாழ்ப்பாணம்.**